**ஜனவரி – 05**

# TNPSC துளிகள்

- 2025 ஆம் ஆண்டின் தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டு நிகழ்வு ஆனது, புதுக்கோட்டை மாவட்டத்தின் கந்தர்வகோட்டை தாலுக்காவில் உள்ள தச்சங்குறிச்சி கிராமத்தில் நடத்தப் பட்டது.
- மொத்த விற்பனை விலைக் குறியீடுக்கான (WPI) அடிப்படை ஆண்டினை 2022-23 ஆக மாற்றியமைப்பதற்காக நிதி ஆயோக் அமைப்பின் டாக்டர் ரமேஷ் சந்த் தலைமையில் 18 பேர் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.
- ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) ஆனது, ஊழியர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் (EPS) கீழ் வருங்கால வாய்ப்பு நிதி ஓய்வூதியங்களை வழங்கச் செய்வதற்காகப் புதிய மையப்படுத்தப்பட்ட ஓய்வூதிய வழங்கீட்டு முறையை (CPPS) முழு அளவில் செயல்படுத்தி முடித்துள்ளது.
- சோமாட்டோ நிறுவனத்திற்குச் சொந்தமான ஒரு விரைவு வர்த்தக சேவை வழங்கீட்டு தளமான பிளிங்க்இட், 2000 ரூபாய் தொகையில் 10 நிமிட அவசர கால மருத்துவ ஊர்தி சேவையை அரியானாவின் குருகிராமில் வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- உள்நாட்டு மற்றும் சர்வதேச வழித்தடங்களில் விமானங்களில் Wi-Fi (அருகலை) சேவை வழங்கும் முதல் விமான நிறுவனமாக ஏர் இந்தியா மாறியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## ஐந்தாவது காவல்துறை ஆணைய அறிக்கை





- சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி C.T. செல்வம் தலைமையிலான ஐந்தாவது காவல் துறை ஆணையமானது தனது இறுதி அறிக்கையை முதல்வரிடம் சமர்ப்பித்துள்ளது.
- காவல்துறையில் ஆட்சேர்ப்பு நிலை முதல் ஓய்வு பெறும் நிலை வரையில் காவல் துறையின் பல்வேறு சிறப்பு அம்சங்கள் குறித்த ஒரு ஆய்வினை உள்ளடக்கிய இந்த அறிக்கையானது தமிழ்நாடு காவல்துறையில் பெரும் சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்துள்ளது.
- காவல்துறை மற்றும் பொதுமக்களின் உறவை வலுப்படுத்துவதற்காக அவர்களின் பரஸ்பர நலன்கள் மற்றும் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்வதற்கான பரிந்துரைகள் இதில் அடங்கும்.

- தமிழக காவல்துறையில் சுமார் 1.3 லட்சம் பணியாளர்கள் உள்ளனர்.


# தேசியச் செய்திகள்

## PMAY-G திட்டம் நீட்டிப்பு




- ஊரக மேம்பாட்டு அமைச்சகம் ஆனது 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா-கிராமின் (PMAY-G) திட்டத்தின் கீழ் 10 லட்சம் வீடுகள் கட்டுவதற்கான இலக்கினை நிர்ணயித்துள்ளது.
- PMAY-G திட்டம் ஆனது, 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், 2029 ஆம் ஆண்டிற்குள் கூடுதலாக இரண்டு கோடி வீடுகளை கட்டமைப்பதை நோக்கமாகக் கொண்டு மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது.
- இதில் மிக அதிக எண்ணிக்கையிலான குடும்பங்களைப் பயனாளிகளாகச் சேர்த்து, அனைவருக்கும் வீடு என்ற இலக்கை முன்னெடுத்துச் செல்லும் வகையில், இந்தத் திட்டத்தின் தகுதி விதிகள் திருத்தப்பட்டுள்ளன.
- 2024-25 ஆம் நிதியாண்டில் வீட்டு வசதித் திட்டத்திற்கு, 54,500 கோடி ரூபாய் என்ற அதிக அளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.


## பாரதிய வாயுயான் ஆதினியம் 2024




- 09.08.2024 அன்று மக்களவையிலும், 05.12.2024 அன்று மாநிலங்களவையிலும் பாரதிய வாயுயான் ஆதினியம் 2024 நிறைவேற்றப்பட்டது.

- மத்திய அரசின் கூற்றுப்படி, 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று, மேற்கூறப் பட்ட சட்டத்தின் விதிகள் அமலுக்கு வந்தது.
- இந்தச் சட்டம் சார்ந்த சீர்திருத்தமானது, தற்காலத் தேவைகள் மற்றும் உலகளாவியத் தரநிலைகளுக்கு ஏற்ப, 1934 ஆம் ஆண்டு விமானச் சட்டத்தினை மீண்டும் மீளியற்றம் செய்வதன் மூலம் இந்தியாவின் விமானப் போக்குவரத்துத் துறையை மிகவும் நவீன மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டது.
- விமானத்தின் வடிவமைப்பு, உற்பத்தி, பராமரிப்பு, உடைமை, பயன்பாடு, இயக்கம், விற்பனை, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மற்றும் அது தொடர்பான விவகாரங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான விதிமுறைகளை இந்தச் சட்டம் வழங்குகிறது.
- மிகைப் பணிநீக்கங்களை அகற்றியுள்ள இந்தச் சட்டம் ஆனது, 21 முறை திருத்தப்பட்ட 1934 ஆம் ஆண்டு விமானச் சட்டத்திற்கான ஒரு மாற்றாக அமைந்தது.

## புகையிலை விவசாயிகளின் வருமானம் 2024





- இந்தியாவின் புகையிலை ஏற்றுமதியானது இந்த ஆண்டு 8 சதவீத வளர்ச்சியுடன் சுமார் 13,000 கோடி ரூபாயைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- உலகில் சீனாவுக்கு அடுத்தபடியாக புகையிலை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- சீனா, பிரேசில் மற்றும் ஜிம்பாப்வே ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக உலகில் பொலிவிலை விர்ஜீனியா (FCV) என்ற புகையிலையை அதிகளவில் உற்பத்தி செய்யும் நான்காவது நாடாக இந்தியா உள்ளது.
- பிரேசிலுக்கு அடுத்தபடியாக செயல்முறையாக்கப் படாத புகையிலையை (அளவின் அடிப்படையில்) அதிகளவில் ஏற்றுமதி செய்யும் இரண்டாவது நாடு இந்தியாவாகும்.
- 2023-24 ஆம் ஆண்டில், இதன் வெளிநாட்டு ஏற்றுமதிகள் சுமார் 12,005.89 கோடி ரூபாய் மதிப்பிலானதாக இருந்தது (1.5 பில்லியன் டாலர்).
- இதில் புகையிலை விவசாயிகளின் வருமானமும் கடந்த 5 ஆண்டுகளில் இரட்டிப்பாகி உள்ளது.
- ஆந்திரப் பிரதேசப் புகையிலையில் கர்நாடகா ரக புகையிலையை விட அதிக அளவு நிகோடின் உள்ளது.
- புகையிலைத் தொழில்துறையின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக ஒரு பாராளுமன்றச்

சட்டத்தின் மூலம் 1976 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று புகையிலை வாரியம் நிறுவப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## குவாட் அமைப்பின் 20 ஆம் ஆண்டு நிறைவு





- இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் குழு ஆனது 'குவாட் (QUAD) ஒத்துழைப்பு அமைப்பின் 20வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் டிசம்பர் 31 ஆம் தேதியன்று ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டனர்.
- 2004 ஆம் ஆண்டு இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமிப் பாதிப்புகளுக்கு நடவடிக்கை எடுக்கும் வகையில் நான்கு நாடுகளும் ஒன்று சேர்ந்தன என்பதோடு இந்த அமைப்பின் நோக்கம் "இந்தப் பகுதி மக்களுக்குச் சேவை செய்வது ஆகும்.
- ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபே இந்தக் கருத்தாக்கத்தினை முன்வைத்ததுடன், 2007 ஆம் ஆண்டில் குவாட் அமைப்பு அதிகாரப்பூர்வமாக உருவானது.
- முதல் அதிகாரப்பூர்வ குவாட் பேச்சுவார்த்தை 2017 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸில் நடைபெற்றது.
- சீனாவின் நெருக்கடி மற்றும் பிராந்தியப் பதற்றம் காரணமாக 2008 ஆம் ஆண்டில் இந்த அமைப்பில் இருந்து வெளியேறிய ஆஸ்திரேலியா 2018 ஆம் ஆண்டில் மீண்டும் இணைந்தது.

## சுவிட்சரலாந்து நாட்டில் புர்கா அணியத் தடை

- "புர்கா தடை" என்று பரவலாக அறியப் படுகின்ற பொது இடங்களில் முகத்தை முழு அளவில் மூடுவதற்கான சுவிட்சர்லாந்து அரசின் இந்தத் தடையானது ஜனவரி 01 முதல் அமலுக்கு வந்துள்ளது.
- இந்தத் தடையை சட்டவிரோதமாக மீறும் எவருக்கும் 1,000 சுவிஸ் பிராங்குகள் (1,144 டாலர்) வரை அபராதம் விதிக்கப்படும்.
- பொது இடங்கள் மற்றும் பொதுமக்கள் அணுகக் கூடிய தனியார் கட்டிடங்கள் ஆகிய இடங்களில் மூக்கு, வாய் மற்றும் கண்களை துணிகளைக் கொண்டு மூடுவதற்கு தடை


விதிக்கப் பட்டுள்ளது.

- இந்தத் தடையானது விமானங்கள் அல்லது அரசு முறை மற்றும் அரசத் தூதரக வளாகங்களுக்குப் பொருந்தாது என்பதோடு மேலும் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பிற புனிதத் தலங்களிலும் முகங்களை மறைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், முஸ்லீம் பெண்கள் அணியும் புர்கா மற்றும் நிகாப் உட்பட, பொது இடங்களில் முகத்தை மூடுவதைத் தடை செய்வதற்கு ஆதரவாக அந்த நாட்டு மக்கள் வாக்களித்தனர்.
- சுவிட்சர்லாந்தில் உள்ள மக்களுக்கு அந்நாட்டின் ஜனநாயக அமைப்பின் கீழ் தங்கள் சொந்த விவகாரங்களில் நேரடியாகக் கருத்துத் தெரிவிப்பதற்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளது.
- சுவிட்சர்லாந்தின் 8.6 மில்லியன் மக்கள் தொகையில் சுமார் 5% பேர் முஸ்லிம்கள் ஆவர் என்ற ஒரு நிலையில் அவர்களில் பெரும்பாலானவர்கள் துருக்கி, போஸ்னியா மற்றும் கொசோவோவிலிருந்து வந்தவர்கள் ஆவர்.




# பொருளாதாரச் செய்திகள்

## அரசின் கடன் தள்ளுபடி திட்டம்





- இந்திய ரிசர்வ் வங்கியானது, அரசாங்க கடன் தள்ளுபடி திட்டத்தில் (DRS) பங்கேற்பது தொடர்பாக கடன் வழங்கீட்டு நிறுவனங்களுக்கான சில கொள்கைகளை வகுத்து உள்ளது.

- இதில் வட்டி முறையை மற்றும்/அல்லது அசல் தொகையை கைவிடுதல் மற்றும் கடன் கணக்கு நிலை அடங்கும்.
- கடனாளிகளுக்குக் கடனிலிருந்து நிவாரணம் வழங்குவதற்காக மாநில அரசுகள் DRS அறிவிப்பதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
- இதில் இயற்கைப் பேரிடர்களின் போது அறிவிக்கப்படுகின்ற விவசாயிகள் கடன் தள்ளுபடி அல்லது அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு முன்னதாக ஒரு குறிப்பிட்ட கடன் பெற்ற பிரிவினருக்கு உறுதியளிக்கும் தள்ளுபடிகள் ஆகியவை அடங்கும்.
- வசூலிக்கப்பட்ட ஆனால் வரவு வைக்கப்படாத வட்டி மற்றும்/அல்லது அசல் தொகை செலுத்தலில் தள்ளுபடி என்பது ஏதேனும் ஒரு சமரசத் தீர்வாகக் கருதப்படும்.
- இது வழக்கமான ஒதுக்கீடு மற்றும் சொத்து வகைப்பாடு விதிமுறைகளுக்கு உட்படும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## விண்வெளி குப்பைகளுக்கான இந்தியா - ஜப்பான் கூட்டுறவு





- ஜப்பான் மற்றும் இந்தியாவில் உள்ள விண்வெளி சார் புத்தொழில் நிறுவனங்கள் விண்வெளி சுற்றுப்பாதையில் உள்ள குப்பைகளை அகற்றுவதற்கு சீரொளிக் கற்றைப் பொருத்தப்பட்ட செயற்கைக்கோள்களைப் பயன்படுத்துவது குறித்த கூட்டு ஆவிற்கு ஆய்விற்கு ஒப்புக் கொண்டுள்ளன.
- இது சுற்றுப்பாதையில் உள்ள மாபெரும் அளவிலான குப்பைத் திரள் பிரச்சனைக்கு ஒரு சோதனை சார் அணுகுமுறையாகும்.
- டோக்கியோவைச் சேர்ந்த ஆர்பிட்டல் லேசர்ஸ் மற்றும் இந்திய நாட்டின் ரோபோடிக்ஸ் நிறுவனமான இன்ஸ்பெசிட்டி ஆகியவை விண்வெளி சார் சேவைகளுக்கான வணிக வாய்ப்புகள் குறித்து ஆய்வு செய்யும்.
- செயலிழந்த செயற்கைக்கோளை விண்வெளிச் சுற்றுப்பாதையில் இருந்து நீக்குவதும், விண்கலத்தின் ஆயுளை நீட்டிப்பதும் இதில் அடங்கும்.
- ஆர்பிட்டல் லேசர்ஸ் நிறுவனமானது, இந்தப் புதிய அமைப்பை விண்வெளியில் செயல் விளக்கி 2027 ஆம் ஆண்டிற்குப் பிறகு சேவை வழங்கீட்டு அமைப்புகளுக்கு வழங்க திட்டமிட்டுள்ளது.
- ஆர்பிட்டல் லேசர்ஸ் நிறுவனமானது, விண்வெளிக் குப்பைகளின் மேற்பரப்பின் சிறிய

பகுதிகளை ஆவியாக்குவதன் மூலம் விண்வெளி குப்பைகளின் சுழற்சியை நிறுத்த சீரொளிக் கற்றை ஆற்றலைப் பயன்படுத்தும் அமைப்பை உருவாக்குகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மேற்குத் தொடர்ச்சி மலையில் புதிய எறும்பு இனங்கள்

- கர்நாடகாவின் குடகு மாவட்டத்தில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் ஒரு புதிய எறும்பு வகை ஒன்றினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- கன்னட மொழியில் ஒனயெலே என்ற சொல்லுக்கு உலர்ந்த இலைகள் என்று பொருள் ஆகும் என்பதோடு இவை மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள காடுகளின் நிலப் பரப்பிற்கு மிக முக்கியமான ஒன்றாக உள்ளன.
- இந்தப் பகுதியில் சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு சமீபத்தில் ப்ரோபோலோமிர்மிக்ஸ் ப்ரோக்னே என்ற இனம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்த இனம் ஆனது இந்தியாவில் மற்ற இரண்டு இடங்களில் மட்டுமே பதிவு செய்யப் பட்டுள்ளது.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## வணிகம் செய்வதற்கான தயார் நிலை (B-READY) அறிக்கை 2024

- உலக வங்கியானது வணிகம் செய்வதை எளிதாக்குதல் அறிக்கைக்கு மாற்றாக 2024 ஆம் ஆண்டு வணிகம் செய்வதற்கான தயார் நிலை (B-READY) குறித்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- வணிகப் பிரிவில், சிங்கப்பூர் போன்ற நாடுகள் ஒரு நாளுக்குள் குறைந்த செலவில் இயங்கலை வழி வணிகப் பதிவு சேவையினை வழங்குகின்றன.
- இந்தியாவில், வணிக நிறுவனங்கள் இன்றும் பல படிநிலைகள் மற்றும் முழுமையற்ற எண்ணிம ஒருங்கிணைப்பு செயல்முறைகளை எதிர்கொள்கின்றன.
- இந்த அறிக்கையானது, ஒவ்வொரு பொருளாதாரத்திற்கும் பிரிவு சார் மதிப்பெண்கள் மற்றும் துணைப் பிரிவு சார் மதிப்பெண்கள் என இரண்டு தொகுப்பு மதிப்பெண்களை


உருவாக்குகிறது.

- எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டு B-READY அறிக்கையில் இந்தியா பங்கேற்கவில்லை.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## தாவரவியலாளர் K.S.மணிலால்




- பிரபல தாவரவியலாளரான டாக்டர் K.S. மணிலால் கேரள மாநிலத்தின் திருச்சூரில் சமீபத்தில் காலமானார்.
- அவர் டென்மார்க் ஆளுநர் ஹென்ட்ரிக் அட்ரியன் வான் ரீட் என்பவரால் தொகுக்கப் பட்ட 17 ஆம் நூற்றாண்டின் இலத்தீன் மொழி கையெழுத்துப் பிரதியான ஹோர்டஸ் மலபாரிக்கஸை மொழிபெயர்த்து அதன் சிறுகுறிப்பினை வெளியிட்டார்.
- அவரது ஆய்வுகள் என்பவை 19 புதிய தாவர இனங்களைக் கண்டுபிடிக்க வழி வகுத்த நிலையில் அவற்றில் நான்கு இனங்களுக்கு அவரது நினைவாக பெயரிடப்பட்டது.
- 1989 ஆம் ஆண்டில் இந்திய ஆஞ்சியோஸ்பெர்ம்/பூக்கும் தாவரங்கள் வகை பிரித்தல் சங்கத்தின் (IAAT) நிறுவனத் தலைவராகப் பணியாற்றினார்.
- அவர் 1999 ஆம் ஆண்டில் இந்தியாவின் தாவரவியல் சங்கத்தின் தலைவராகவும், 1984 முதல் 1986 ஆம் ஆண்டு வரை பொருளாளராகவும் பணியாற்றினார்.
- அவர் விஸ்வம்பர் பூரி பதக்கம் (1990), Y.D.தியாகி தங்கப் பதக்கம் (1998), மற்றும் E.K.ஜானகி அம்மாள் வகை பிரித்தல் விருது (2003) ஆகியவற்றினைப் பெற்றுள்ளார்.

- தாவரவியலில் அவர் ஆற்றிய மிகச் சிறப்பானப் பங்களிப்பிற்காக 2020 ஆம் ஆண்டில் அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
- 2012 ஆம் ஆண்டில் இராணி பீட்ரிக்ஸ் அவர்களால் வழங்கப்பட்ட நெதர்லாந்தின் ஆபிசர் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் ஆரஞ்சு-நாசாவ் விருதை அவர் பெற்றார்.
- இந்த விருதைப் பெற்ற முதல் ஆசிய நாட்டவர் என்ற பெருமையை இவர் பெற்றார்.

# முக்கிய தினங்கள்

## DRDO அமைப்பின் 67வது ஸ்தாபன தினம் - ஜனவரி 01

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) என்பது சுமார் 41 ஆய்வகங்கள் மற்றும் 05 DRDO இளம் அறிவியலாளர் ஆய்வகங்கள் கொண்ட வலை அமைப்பாகும்.
- இது 1958 ஆம் ஆண்டில் இந்திய இராணுவத்தின் தொழில்நுட்ப மேம்பாட்டு நிறுவனம் (TDEs) மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்தி இயக்குநரகத்தை (DTDP) பாதுகாப்பு அறிவியல் அமைப்புடன் (DSO) இணைத்ததன் மூலம் உருவாக்கப்பட்டது.
- DRDO ஆனது 2025 ஆம் ஆண்டில் 100 முக்கியமான திட்டங்களை நிறைவு செய்யவும், 6,000 சோதனைகளை மேற்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




# இதரச் செய்திகள்

## இந்திய வானிலை ஆய்வுத் துறையின் 150வது ஆண்டு நிறைவு

- 1875 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட இந்திய வானிலை ஆய்வுத் துறையானது தனது 150 ஆண்டு காலத்திய சேவை நிறைவு விழாவினைக் கொண்டாட உள்ளது.
- இந்தியத் துணைக்கண்டத்தில் வானிலை பற்றிய ஒரு முறையான கண்காணிப்பு, மிகவும் வழக்கமான அறிக்கையிடல் மற்றும் அறிவியல்துறை சார் முன்னறிவிப்பு ஆகியவற்றிற்காக வேண்டி உருவாக்கப்பட்ட ஆரம்ப கால அரசு துறைகளில் இதுவும் ஒன்றாகும்.
- 1793 ஆம் ஆண்டில் (அப்போதைய) மதராசில் முதலாவது வானிலை மற்றும் வானியல் ஆய்வகம் நிறுவப்பட்டது.

❖ பின்னர் 1875 ஆம் ஆண்டில் H.F.பிளான்ஃபோர்ட் அவர்களை வானிலை அறிக்கையாளர் எனக் கொண்டு இந்திய வானிலை ஆய்வுத் துறையானது நிறுவப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★